# விகாரகம எண்ணக்கருவின் கீழ் மலையகத்தில் முஸ்லிம்களின் குடியேற்ற விஸ்தரிப்பு

[1]S.F Silmiya, [2]M.T.F.M Thaseem
[1]Department of History, University of Peradeniya
[2] Computer Unit, South Eastern University of Sri Lanka

**ஆய்வுச் சுருக்கம்**

பண்டைய இலங்கையானது இராஜரட்டை, மலையரட்டை, றுகுனுரட்டை என மூன்று முக்கிய பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருந்தது. மலையரட்டை அல்லது கண்டி இராச்சியமானது 21 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு காணப்பட்டது. இத்தகைய மலையக இராட்சியத்துடன் மிக நீண்ட வரலாற்று பாரம்பரியத்தைக் கொண்ட முஸ்லிம்கள் சமய, வர்த்தக மற்றும் பாதுகாப்பு நிமித்தம் மிகச்சிறந்த தொடர்புகளை பேணி வந்துள்ளனர். 16ஆம் நூற்றாண்டுகளில் போர்த்துகேயரின் நசுக்குதல்களால் பெரும் துன்பப்பட்ட மக்களுக்கு மலையக மன்னர்களே புகழிடம் அளித்தனர். மலையக இராசதானியில் அரச ஆதரவுடன் பெருமளவு முஸ்லிம் குடியேற்றங்கள் ஏற்றப்பட்டன. குற்ப்பிடத்தக்கதாக பௌத்த விகாரையொன்றுக்கு மக்களால் ஆற்றப்பட வேண்டிய முக்கிய மூன்று சேவைகளான அவ்வப்போது செய்யும் சேவைகள், தொடர்ச்சியாக செய்யும் சேவைகள், போக்குவரத்து சேவைகள் என்பவற்றில் கண்டி முஸ்லிம்கள் தம்மாலான பங்களிப்பை வளங்கியதூடாக இதற்கு பிரதியுபகாரமாக முஸ்லிம்களுக்கு விகாரைக் காணிகளில் ஏராளமானவை மானியங்களாக வழங்கப்பட்டுள்ளன. அவ்வகையில், இவ்வாய்வானது விகாரகம எண்ணக்கருவின் கீழ் வெவ்வேறுபட்ட விகார சேவைகளின் ஊடாக முஸ்லிம்கள் பெற்ற நில மானியங்களையும் அதனடிப்படையில் தோற்றம் பெற்ற முஸ்லிம்களின் குடியேற்றங்கள் பற்றி ஆராய்வதாக உள்ளது. அதுமட்டுமன்றி ஆரம்பத்தில் மாற்றமடையும் பங்கின் அடிப்படையிலும் பின் கன்வசம் பங்கு மற்றும் பரவேனி உரிமையும் பெற்று மலையகத்தில் பல்வேறுபட்ட பிரதேசங்களிலும் முஸ்லிம்களின் குடியேற்ற விஸ்தரிப்பு நடைபெற்ற முறையை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும். வரலாற்று ஆய்வு மாதிரிகள் பயன்படுத்தி முதல்தர மற்றும் இரண்டாம் தர மூலாதாரங்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. விகாரகம என்ற எண்ணக்கருவின் கீழ் சிங்கள-முஸ்லிம் சமூகங்களுக்கிடையிலான நல்லுறவு மற்றும் சீர்மையான தொடர்புகளை அடையாளம் காணக் கூடியதாக உள்ளதுடன் மலையக இராட்சியத்தின் விருத்திக்காக முஸ்லிம்கள் செய்த பல்வேறுபட்ட சேவைகளையும் கண்டறியக் கூடியதாக உள்ளது. விட்டுக்கொடுப்பு, சகிப்புத்தன்மை, பிற மதக்கோட்பாடுகளை மதித்தல் போன்ற உயரிய கருத்தியல்களை அடிப்படையாகக் கொண்டே மலையகத்தில் முஸ்லிம்களின் குடியேற்ற விஸ்தரிப்பானது இடம்பெற்றுள்ளது. இனங்களுக்கிடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டுவரும் இக்காலகட்டத்தில் மேற்படி வரலாற்றை வெளிச்சத்துக்கு கொண்டுவருவதன் ஊடாக நாடு பூராகவும் சிங்கள-முஸ்லிம் நல்லிணக்கத்தை மீள உறுதிப்படுத்தக் கூடியதாக இருக்கும்.

**திறவுச்சொற்கள்** :

விகாரகம, மலையகம், முஸ்லிம் குடியேற்றங்கள், சிங்கள-முஸ்லிம் நல்லுறவு.

## 1. அறிமுகம்

இலங்கையில் மன்னராட்சி நிலவிய இறுதி இராட்சியம் கண்டி இராட்சியமே ஆகும். போர்த்துக்கேய ஒல்லாந்தர்கள் தீவின் கரையோரப் பகுதிகளை தம் ஆளுகைக்கு உட்படுத்திய பின்னும் 1815ம் ஆண்டு பிரித்தானியரால் கண்டி இராட்சியம் கைப்பற்றப்படும் வரையுமே அது சுயாதீனமாகவே இருந்துள்ளது. எனவே தான் இவ் இராட்சியத்தின் சிறப்பும் அதன் கலாச்சார பாரம்பரியங்களும் இன்று வரை மதிக்கப்பட்டு வருகின்றன. கண்டி இராட்சியத்துக்கு உட்பட்ட பிரதேசங்கள் தொடர்பாக கண்டிய மன்னர்கள் ஆட்சிக் காலத்திலேயே தெளிவான எல்லை நிர்ணயமானது மேற்கொள்ளப்பட்டிருந்தது. மலையக இராசதானி 21 பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருந்ததுடன் 12 திசாவனிகளைக் கொண்டிருந்தன. நாலு கோறளை, ஏழு கோறளை, மூன்று கோறளை, ஊவா, சப்ரகமுவை, மாத்தளை, வலப்பனை, உடபலாத்தை, நுவரகலாவிய, வன்னி, வெள்ளவாய, பின்தென்ன, தம்மன்கடுவ என்பனவே அத் திசாவைகளாகும்.

மேற்படி மலையக இராட்சியத்தில் முஸ்லிம் குடியிருப்புக்களின் தோற்றம் பற்றி நோக்கும் போது அது ஐரோப்பியர் காலத்திற்கு முந்தியதாகத் தெரிகின்றது. மிகப் பிரதானமாக மூன்று காரணிகளுக்காக மலையக இராசதானியில் முஸ்லிம் குடியிருப்புக்கள் தோற்றம் பெற்றுள்ளமையை ஆராயும் போது அடையாளம் காணக் கூடியதாக உள்ளது. ஆரம்பத்தில் பாவாதாம் மலையை தரிசிப்பதற்காக சமய நோக்கில் குறிப்பிடத்தக்களவு முஸ்லிம்களின் தொடர்புகள் மலையகத்தில் நிலவி வந்துள்ளன. இதன் பின்னர் கரையோரத்தில் வசித்த முஸ்லிம்கள் வர்த்தகர்களாக மலையகத்துக்கு தேவையான வர்த்தக பொருட்களை கொண்டு வந்து கொடுத்துள்ளனர். எனினும் 16ஆம் நூற்றாண்டின் பின்னர் போர்த்துக்கேயரின் நசுக்குதல்களால் பாதுகாப்பு நிமித்தமே மலையகத்தில் பெருமளவிலான முஸ்லிம் குடியேற்றங்கள் ஏற்பட்டுள்ளன.

கோட்டை இராட்சிய அரசியல் பூசல்களை தமக்கு சாதகமாக பயன்படுத்த எண்ணிய போர்துக்கேயர் கோட்டை மன்னன் புவனேகபாகுவுக்கு பாதுகாப்பு அளிப்பதாக கூறி மன்னனின் நட்பைப் பெற்றனர். பின் அந்நட்பைப் பயன்படுத்தி முஸ்லிம்களுக்கு எதிரான பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. 1521ல் கோட்டையில் உள்ள முஸ்லிம்களை 03 தினங்களுக்குள் வெளியேறுமாரு புவனேகபாகு கட்டளை பிறப்பித்தான். எனினும் இதன் போது சீதாவாக்கை மன்னன் மயாதுன்னை முஸ்லிம்களுக்கு புகலிடம் அளித்தான்.

கி.பி 1622, 1623, 1624 முஸ்லிம்களுக்கு எதிராக பல கட்டளைகள் வெளியிடப்பட்டதுடன் கி.பி 1626 கட்டளையானது கோட்டையிலிருந்து முஸ்லிம்களை முழுமையாக வெளியேற்றிவிடும் படி கூறியிருந்தது. இக்கட்டளையின் பின்னர் கரையோரத்திலிருந்த முஸ்லிம்கள் முழுமையாக வெளியேற்றப்படாவிடுனும் தொடர்ந்தும் வர்த்தக மற்றும் சமய சுதந்திரத்துடன் வாழ முடியும் என்ற நம்பிக்கையை பெருமளவுக்கு இழந்திருந்தனர்.

கி.பி 1640ல் காலிக் கோட்டையை கைப்பற்ற முஸ்லிம்கள் உதவி செய்ததாக அறிந்த அன்டோனியோ டி அம்ரோல் மாத்தறையில் 300 முஸ்லிம்களையும் பேருவளையிலும் பெருமளவிலான முஸ்லிம்களையும் படுகொலை செய்ததாக கொய்ரோஸ் பாதிரியார் குறிப்பிடுகின்றார்.

மேற்படி கரையோரத்தில் நசுக்கப்பட்ட முஸ்லிம்களுக்கு பாதுகாப்பானதொரு புகலிடம் தேவைப்பட்டது. இந்நிலையில் அத்தகைய பாதுகாப்பும் வரவேற்பும் அப்போதைய சுயாதீன இராட்சியமாக இருந்த கண்டி மன்னனிடமிருந்து கிடைக்கப் பெற்றமை முஸ்லிம்களுக்கு பேருதவியாக அமைந்தது. இலங்கையில் போர்த்துக்கேய வரலாற்றை எழுதிய கொய்ரோஸ் பாதிரியார் போர்த்துக்கேய பகுதிகளிலிருந்து பெருமளவிலானோர் கண்டிக்கு ஓடியதாக குறிப்பிடுவதைக் காணலாம். மேற்படி பதினாறாம் நூற்றாண்டின் பின் பாதுகாப்பின் நிமித்தமே மிகப் பெருமளவில் மலையகத்தில் முஸ்லிம்களின் குடியிருப்புக்கள் தோற்றம் பெற்றுள்ளமையை அடையாளப்படுத்தக் கூடியதாக உள்ளது.

இவ்வாறு வந்து குடியேறியோராகவே அக்குறணை முஸ்லிம்கள் உள்ளனர். மட்டக்களப்பில் 4000 முஸ்லிம்கள் குடியமர்த்தப்பட்டதுடன் கண்டி, கம்பளை, மடவளை, மாத்தளை, கெடபேரிய உள்ளிட்ட மலையகத்தில் பல பகுதிகளிலும் இக் கால கட்டத்தில் முஸ்லிம் குடியிருப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

தொடர்ந்து வந்த ஒல்லாந்தர் காலத்திலும் கரையோரத்தில் எஞ்சியிருந்த முஸ்லிம்கள் சமய ரீதியாகவும் வர்த்தக ரீதியாகவும் நசுக்கப்பட்டனர். எனவே இக் காலப்பகுதிகளிலும் மலையகத்தை நோக்கிய முஸ்லிங்களின் பெயர்வு மேலும் அதிகரித்தது.

இவ்வாறு கண்டி இராட்சியத்தில் குடியமர்த்தப்பட்ட முஸ்லிம்கள் கிரேக்க மற்றும் யூனானி மருத்துவ பாரம்பரியத்தை கொண்டோர்களாகவும் வர்த்தகத்தில் கைதேர்ந்தவர்களாகவும் இருந்தமையால் கண்டியர்களிடையே அவர்கள் பிரபல்யம் அடைந்தனர்.

இரண்டாம் இராஜசிங்கன் (1635-1687) தனது இராட்சியத்தில் முஸ்லிம்களின் நிரந்தரக் குடியிருப்புக்களை பெரிதும் ஊக்குவித்தான். கண்டிய பெண்களை திருமணம் செய்து கொள்ள அனுமதி அளித்து நிலபுலன்களையும் வழங்கினான். மேலும் முஸ்லிம்களின் சமய அனுஷ்டானங்களுக்கும் முழுமையான சுதந்திரம் மலையகத்தில் கிடைக்கப் பெற்றது. பள்ளிவாயல்களை அமைக்கவென அரசர்களாலேயே நிலங்களும் வழங்கப்பட்டுள்ளன.

இதனால் மலையக இராசதானியில் அரச ஆதரவுடன் பெருமளவு முஸ்லிம் குடியிருப்புக்கள் உருப்பெற்றன. இக்காலகட்டத்தில் முஸ்லிம்கள் கண்டி மன்னனின் மாளிகை அலுவல்களிலும் இராட்சியத்தின் அரசியல், இராணுவ விவகாரங்களிலும் பெரும் முக்கியத்துவம் வாய்ந்தோராக இருந்துள்ளனர். இந்த வகையிலேயே மலையகத்துக்கு வந்த முஸ்லிம்கள் விகாரை கட்டமைப்புடன் தொடர்புபட்ட பல்வேறு சேவைகளை செய்ததன் ஊடாக அவர்களுக்கு விகாரகம எண்ணக்கருவின் கீழ் நிலமானியங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் முஸ்லிம்களின் நிரந்தரக் குடியிருப்புக்கள் மலையகத்தில் தோற்றம் பெற்றுள்ளமையையும் அடையாளம் காணக் கூடியதாக உள்ளது.

விகாரை தேவாலயங்களுக்கு நிலங்கள் மானியமாக வழங்கப்படும் போது அவற்றில் வசித்த மக்களும் சேர்த்த வகையிலேயே வழங்கப்பட்டுள்ளது. விகாரைக்கு தேவையான பணிகளைச் செய்தலே இதனூடாக எதிர்பார்க்கப்பட்டுள்ளது. விகாரைகளுக்கு உரித்தான நிலங்கள் பிரதானமாக இரு வகைப்பட்டன.

1. முத்தெட்டு நிலங்கள்
2. நிலப்பங்கு நிலங்கள்

அதில் முதலாவது முத்தெட்டு நிலங்களாகும். இரு வகையான முத்தெட்டு நிலங்கள் காணப்பட்டன. விகாரை அல்லது தேவாலய முத்தெட்டு நிலம் மற்றும் அத முத்தெட்டு என்பவையே அவையாகும். இங்கு முதலாவது வகையானது மன்னனால் அல்லது பிரதானியொருவரால் விகாரைகளுக்கு மானியமாக வழங்கப்பட்டதுடன் அதன் முழுமையான உற்பத்தி விகாரைகளுக்கு உரியதாக காணப்பட்டது. விகாரையின் தலைமை பிக்கு இந்நிலத்தின் நிலப்பிரபுவை போன்றவராவார். இது ஐரோப்பிய நிலமானிய முறையை ஒத்ததாகக் காணப்பட்டது. எனினும் அங்கு காணப்பட்ட அடிமை-பிரபு உறவின் கொடிய நிலையன்றி இலங்கையில் மிகவும் இலேசான நல்ல உறவு நிலையே காணப்பட்டது. அத முத்தெட்டு நிலங்களைப் பொறுத்தவரை இடத்தின் விளைச்சலின் குறிப்பிட்ட ஒரு பகுதி மாத்திரமே விகாரை அல்லது தேவாலயத்துக்காக உரியதாக காணப்பட்டன.

நிலப்பங்கு நிலங்களும் இரு வகைப்பட்டன. இங்கு முதலாவது பிரிவாக பரவேணி நிலங்களே காணப்பட்டதுடன் அங்கு சேவையில் ஈடுபட்டது பரம்பரை பரம்பரையாக விகாரை, தேவாலயங்களுக்கு ஏதேனும் சேவைகளைச் செய்தோராவர்.( மேளமடித்தல், பெரஹரவில் கொடி ஏந்திச் செல்லல், விகாரைகளை துப்பறவு செய்தல், முத்தெட்டு நிலங்களின் விளைச்சலை திரட்டி வழங்கள்) இவ்விடங்களின் உரிமை பரம்பரை பரம்பரையாக கைமாற்றப்படக் கூடியதாகவே இருந்தது.

இங்கு இரண்டாவது பிரிவாக மாற்றமடையும் பங்கு காணப்பட்டதுடன் இது குறுகியகால சேவைகளுக்காக இடத்துக்கான உரிமை தற்காலிகமாக கிடைக்கப்பெறுவதை குறித்து நின்றது. (முத்தெட்டுக்களால் வழங்கப்படாத சேவைகள் மற்றும் எண்ணெய் வழங்குதல், போக்குவரத்துச்சேவை)விளைச்சல் முடிவடையும் வரை அதனைப் பெற்றவர் அந்நிலத்திலிருந்து நீக்கப்பட முடியாதிருந்தது. இவர்களும் எவ்வித தடையும் இன்றி பரம்பரை பரம்பரையாக பலபோது ஒரே இடத்தில் பயிரிட்டு வந்தமையால் இவை சில தசாப்தங்களிலேயே அவர்களுக்குறிய பரவேணி உரித்துடையதாக மாற்றமடைந்துள்ளன. இவ் உரிமையை எவரும் நீக்க முடியாததாகவே இருந்துள்ளது. ஆரம்ப காலத்தில் பரம்பரையாக உரித்துடைய நிலங்கள் மாத்திரமே பரவேணி உரிமை பெற்றாலும் 1636 களின் பின்னர் முப்பது வருடங்களுக்கு மேல் உரிமையுடைய நிலங்கள் இலகுவில் பரவேணி உரிமையுடையனவாக நோக்கப்படும் நிலை ஏற்பட்டிருந்தது.

மலையகத்தில் ஆரம்பத்தில் வர்த்தகர்களாக வந்த முஸ்லிம்கள் போக்குவரத்து சேவைக்காக மாற்றமடையும் பங்கின் அடிப்படையில் நிலங்களைப் பெற்றுள்ளதுடன் தொடர்ந்தும் விகாரை இராஜகாரியங்களை மேற்கொண்டு வந்தமையாலும், அவ்விடத்திலேயே தங்கி வாழ்ந்தமையாலும் அவர்களுக்கு அந்நிலங்களின் பரவேனி உரிமை கிடைக்கப் பெற்றுள்ளமையை ஆராயும் போது அடையாளம் காணக் கூடியதாக உள்ளது. இவ்வாறே 16ஆம் நூற்றாண்டின் பின்னர் விகாரகம எண்ணக்கருவின் கீழ் பௌத்த விகாரை நிலங்களில் முஸ்லிம்களின் குடியேற்ற விஸ்தரிப்பு ஏற்பட்டுள்ளமையை அடையாளம் காணக் கூடியதாக உள்ளது.

**2. இலக்கிய மீளாய்வுகள்**

இவ் ஆய்வுக்காக பல இலக்கியங்கள் மீளாய்வு செய்யப்பட்டுள்ளன. ஆய்வின் வரையறை கருதி மிக முக்கியமாக இவ்வாய்வுக்கு பயனுடையதாக அமைந்த ஒரு சில இலக்கிய மீளாய்வுகள் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளன. அந்தவகையில்,

úu,r;ak, fla .ä .ý. (1991). *ì%;dkHka hgf;a ,xldfú úydr bvï md,kh.* iaj¾Kf,ald uqøKd,h. foysj,.

எனும் நூலானது பௌத்த விகாரை நிலங்களின் பரிபாலனம் தொடர்பாக பிரித்தானியரால் ஏற்படுதப்பட்ட செல்வாக்குகளை ஆராய்வதாக உள்ளது. இதில் பௌத்த விகாரைக்கு உரித்தான நிலங்களின் பிரதானமான வகைகள், பௌத்த விகாரைக்கு உரித்தாக இருந்த மொத்த நிலப்பரப்பு இவ்வாறான விகாரை நிலங்கள் மற்றும் அவற்றிலிருந்த மக்கள் தொடர்பில் பிரித்தானியர் கையாண்ட கொள்கைகள், அதனால் விகாரை சேவையிலிருந்து மக்கள் விடுவிக்கப்பட்டமை பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. விகாரைக்கு உரித்தான நிலங்கள் மற்றும் விகாரை சேவை பற்றி குறிப்பிடும் போது அளுத்நுவர விகாரை, ரிதி விகாரை போன்றனவற்றில் சேவையாற்றிய முஸ்லிம்கள் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ாபதசஇ ஆï. Ù. ஆï. ஆயை. (2005). *கழயதனஇ றுஅ்.* ச்யமனாட அமுளமயகப¾யை. மளÛப்ïருஙத.

இந்நூலில் பிரதானமாக பௌத்த விகாரையொன்றுக்கு மக்கள் செய்த பிரதானமான சேவைகளை வகைப்படுத்தி அதனடிப்படையில் வேறுபட்ட பிரதான விகாரைகள் பற்றி விளக்கமாக முன் வைக்கப்பட்டுள்ளது. இங்கு ஆசிரியர் வகைப்படுத்தும் உற்சவங்களில் பங்கேற்றல், கட்டட நிர்மானம் போன்ற அவ்வப்போது செய்யும் சேவைகளிலும், மேளமடித்தல், கணக்குவழக்கு செய்தல் போன்ற தொடர்ச்சியாக வழங்கும் சேவைகளிலும், விகாரைக்கு தேவையான பொருட்களை வழங்கும் போக்குவரத்து சேவையிலும் மலையக முஸ்லிம்கள் ஈடுபட்டுள்ளமையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

நஜிமுதீன், ஏ,எம். (1998). *கண்டி இராட்சிய முஸ்லிம்களின் சிங்கள வம்சாவளிப் பெயர்கள்.* நுவன் ஒப்செட். மாத்தளை.

இந்நூலானது கண்டி இராச்சிய காலத்தின் ஆட்சியாளர்கள் மற்றும் சிங்கள சமூகத்தோடு முஸ்லிம்கள் கொண்டிருந்த நெருங்கிய தொடர்புகளைக் காட்டும் நூலுருப்படுதப்பட்ட ஆக்கம் எனலாம். இதில் கண்டி இராச்சியத்தில் வாழ்ந்த முஸ்லிம் சமூகத்தவர்களால் ஆற்றப்பட்ட சேவைகளுக்கு ஏற்ப அவர்களுக்கு வழங்கப்பட்ட கௌரவ நாமங்கள் பற்றி அதிகமாக விபரிக்கப்பட்டுள்ளது. அதில் விகாரகம என்ற

எண்ணக்கருவின் கீழ் மலையகத்தின் விகாரைகளில் சேவையாற்றிய முஸ்லிம்களுக்கு நிலங்கள் மற்றும் கௌரவ நாமங்கள் சூட்டப்பட்டமை பற்றி தகவல்கள் முன்வைக்கப்பட்டுள்ளது.

Dewaraja, Lorna. (1994). *The Muslims of Sri Lanka One Thousand Years of Ethnic Harmony: 900-1915,* London Islamic Foundation. Colombo.

இந்நூலிலும் விகாரை கட்டமைப்பில் இனத்திலும் மதத்திலும் வேறுபட்டவர்களாக இருந்த போதிலும் எவ்வாறு முஸ்லிம்கள் உள்வாங்கப்பட்டார்கள் என்பது தொடர்பாகவும் அவர்கள் செய்த சேவைகள் மற்றும் தளதா மாளிகை, தெகல்தொருவ விகாரை, ரிதி விகாரை உட்பட பல விகாரை நிலங்களில் முஸ்லிம்களுக்கு நிலமானியங்கள் வழங்கப்பட்டுள்ளமை பற்றிய தகவல்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**3. தரவும் தரவுப்பகுப்பாய்வும்**

இவ் ஆய்வுக்காக நூலகம் மற்றும் தேசிய சுவடிகள் கூடத்திலிருந்து பெறப்பட்ட முதலாம்தர மற்றும் இரண்டாம்தர மூலாதாரங்கள் மூலமாக தகவல்கள் திரட்டப்பட்டன. திரட்டப்பட்ட தகவல்கள் வரலாற்று ஆய்வு மாதிரியில் பகுப்பாய்வு செய்யப்பட்டு இவ்வாய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. முதலாம் நிலைத்தரவு எனுமிடத்து தேசிய சுவடிகள் கூடத்தில் இருந்து பெறப்பட்ட 1870 மற்றும் 1872 ஆம் ஆண்டுக்குரிய Service Tenure ஆணைக்குழுவின் அறிக்கைகளின் ஊடாகவும் H.C.B Bell அவர்களின் Sessional Papers ஊடாகவும் விகாரகம நிலங்கள் பற்றிய தரவுகள் திரட்டப்பட்டன. இரண்டாம் நிலை தரவுகளாக மேலே இலக்கிய மீளாய்வில் குறிப்பிடப்பட்ட பிரகாரம் விகாரகம நிலத்தின் வகை அவற்றில் முஸ்லிம் குடியேற்றம் நிறுவப்பட்ட முறை போன்ற தகவல்கள் பெறப்பட்டு பகுப்பாய்வு செய்து முடிவுகள் பெறப்பட்டன.

**4. கலந்துரையாடலும் கண்டறிதல்களும்**

மலையகத்தில் 16ம் நூற்றாண்டிலிருந்தே முஸ்லிம் குடியேற்றங்கள் ஏற்பட்டதுடன் மலையகத்தில் வசித்து வந்த சிங்களவர்களுடன் முஸ்லிம்கள் நெருக்கமான உறவினை பேணி வந்துள்ளனர். இதனடிப்படையிலேயே விகாரைகளிலே சேவையாற்றியதால் விகாரகம நிலங்களில் முஸ்லிம்களின் நிரந்தர குடியிருப்புக்கள் ஏற்பட்டுள்ளன. இலங்கையில் மிக ஆரம்பகாலத்தில் இருந்தே அரசுக்கும் சமயத்துக்கும் இடையே நெருங்கிய தொடர்பு நிலவிவந்துள்ளன. இதனால் தம் கடமையான சமயத்தை பேணிப்பாதுகாப்பதற்காக இலங்கை மன்னர்கள் பல்வேறுபட்ட தானங்களை வழங்கி உள்ளனர். நிலங்கள் அனைத்தும் மன்னனுக்கு உரித்தாக காணப்படுவதுடன் மன்னனால் விகாரைகளுக்கு மானியமாக வழங்கப்பட்ட நிலங்கள் விகாரகம எனப்பட்டன. தனிநபர் மானிய நிலங்கள் நிந்தசம் என்றே வழங்கப்பட்டன. கண்டியில் மிகப் பிரதானமான பௌத்த வழிபாட்டு மையமான தலதா மாளிகைக்கு மாத்திரம் மன்னர்களால் மானியமாக வழங்கப்பட்ட நெற்காணிகள் சுமார் 185 ஏக்கரும் , மேட்டு நிலமாக சுமார் 500 ஏக்கரும் 1858ம் ஆண்டு கணிப்பின் படி பதிவு பண்ணியும், பதிவாகமலும் இருந்துள்ளன. இவ்வாறு மன்னனால் பல்வேறுபட்ட அடிப்படையில் மானியமாக வழங்கப்பட்ட நிலங்கள் சமயத்திலும் இனத்திலும் வேறுபட்டவர்களாக இருந்த போதும் முஸ்லிங்களுக்கும் கிடைக்கப் பெற்றுள்ளன.

முஸ்லிம்களைப் பொறுத்தவரை அவர்கள் விகாரையில் பல்வேறுபட்ட சேவைகளை ஆற்றியமையின் விளைவாகவே விகாரகம நிலங்களில் சேவைப் பங்குகளைப் பெற்றுக் கொண்டனர். பௌத்த விகாரையென்றுக்கு மக்களால் ஆற்றப்பட்ட சேவைகளை பிரதானமாக மூன்று வகைக்குள் உள்ளடக்கலாம்.

1. அவ் அப்போது செய்யும் சேவைகள் - உற்சவங்களில் பங்கேற்றல், கட்டட நிர்மாணம் மற்றும் திருத்த வேலைகள்.
2. தொடர்ச்சியாக வழங்கிய சேவைகள் - விகாரையில் கணக்கு வழக்குளைச் செய்தல், மேளமடித்தல்
3. போக்குவரத்துச் சேவை – தேவையான பொருட்களை வழங்குதல்.

இடங்களில் விளைச்சல் செய்வோரிடம் இருந்து பெறப்பட்ட இச் சேவைகளால் விகாரைகளை பேணுவதற்கும் கொண்டு நடாத்துவதற்கும், சங்கத்தோரின் வாழ்வு மற்றும் சமயச் சடங்குளைச் செய்வதற்கும் தேவையான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. மேற்படி பிரதானமான மூன்று வகையிலான சேவைகளிலும் கண்டிய முஸ்லிம்கள் தம்மாலான பங்களிப்பினை வழங்கியுள்ளனர் என்பதை வரலாற்றை ஆராய்வதனூடாக விளங்கிக் கொள்ள முடிகின்றது.

முஸ்லிம்கள் அனேகமாக வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டமையாலும் தவளப் போக்குவரத்து முறையை நன்கறிந்திருந்தமையாலும் அவர்களுக்கு விகாரகம நிலங்களில் பிரதானமாகவும் முதலாவதாகவும் 'பதவிலி பங்குவ' என்ற சறக்கேற்று இன்றேல் போக்குவரத்துச் சேவைப் பங்குகளே கிடைக்கப் பெற்றுள்ளமையை அடையாளம் காணக் கூடியதாக உள்ளது. இவர்கள் பிரதானமாக விளைநிலங்களில் விளைந்த தானியங்களையும் பழங்களையும் கரையோரப் பகுதிகளிலிருந்து கொண்டுவரப்பட்ட உப்பு, கறுவாடு போன்றவற்றையும் விகாரைகளுக்கு வழங்கியுள்ளனர்.

முஸ்லிம்களுக்கு முதன்முதலில் கிடைக்கப் பெற்ற இத்தகைய போக்குவரத்துப் பங்குகள் தொடர்பில் கவனம் செலுத்தும் போது குருணாகலையின் அதாவது பண்டைய மலையக இராட்சியத்தின் ஏழு கோறளையில் அமைந்திருந்த ரிதீ விகாரையுடன் முஸ்லிம்கள் கொண்டிருந்த தொடர்புகள் இதற்கு மிகச் சிறந்த உதாரணமாக அமைகின்றது. ரீதி விகாரையின் மானிய உரித்துடைய கிராமங்கள் ஏழு காணப்பட்டுள்ளது. அவற்றிடையே றம்புக்கன முழுமையாக முஸ்லிம்களைக் கொண்டதொரு கிராமமாகவே இருந்துள்ளது. இவ்விகாரைக்குரிய முத்தெட்டு வயல்களிலிருந்து விளைபொருட்ளை எடுத்துச் செல்வதற்காக வருடாவருடம் நான்கு நாட்களுக்கு ஐந்து மாடுகளைக் கொடுத்துதவும் பணியை ஒமர் லெப்பை வெத குருன்னஹே என்பவர் செய்து வந்துள்ளார். இத்துடன் ஆற்றிலிருந்து கட்டட நிர்மாணப் பணிகளுக்குத் தேவையான மணலை எடுத்துச் சென்று விகாரைக்கும் அதற்குரிய வீடுகளுக்கும் வழங்குவதும் இவரது பணியாக இருந்துள்ளது. இச்சேவைகளை ஆற்றியமையால் இவருக்கு இரண்டு ஏக்கர் வயலும், ஒரு ஏக்கர் வீட்டுத் தோட்டமும் ஐந்து ஏக்கர் அளவிலான சேனை நிலமும் மானியமாக வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் அரிசி, குரும்பை, தேங்காய், நெத்தலி, பூசனிக்காய், மற்றும் தானியமும் ஒரு குறிப்பிட்ட தொகை இவர் விகாரைக்கு செலுத்த வேண்டியிருந்தது. இது தவிர கட்டாயமற்ற போதிலும் தம் சுய விருப்பின் அடிப்படையில் றம்புக்கனை முஸ்லிம்கள் பெரஹரா வைபவத்தின் போது விகாரைக்கு அவசியமான பல பணிகளையும் முனைப்புடன் ஆற்றியுள்ளனர்.

செங்கடகலபுரயின் நான்கு தேவாலயங்களில் ஒன்றான பத்தினி தேவாலயத்தின் பத்தவிலி பங்குகளையும் முஸ்லிம்கள் பெற்றிருந்துள்ளனர். இது தவிர அஸ்கிரி அலுத்விகாரைக்குரிய மானிய நிலங்கள் பல அக்குறணைப் பிரதேசத்தில் காணப்பட்டுள்ளதுடன் இவற்றிலும் சில சறக்கேற்றும் பங்குகள் முஸ்லிம்களுக்கும் கிடைக்கப் பெற்றுள்ளன. குறிப்பாக 'லுனு தென பங்குவ' உப்பு வழங்கும் பங்கே இவர்களுக்கு கிடைக்கப் பெற்றுள்ளது. தாம் அனுபவிக்கும் நிலத்தக்குரிய வரியாக இவர்கள் குறிப்பிட்டளவு தானியங்களும் வெற்றிலையும் வழங்கி உள்ளனர். அபூ பக்கர் லெப்பே வெதரால என்பவர் இத்தகைய நிலப்பங்குகளை பெற்றிருந்துள்ளதுடன் அதற்கென ஒரு தொகைப் பணத்தை வரியாக செலுத்தியுள்ளமையை அவதானிக்கக் முடிகின்றது.

கண்டி தெகல்தொருவ விகாரைக்குச் சொந்தமான அக்குறணைக்கு அருகில் அமைந்துள்ள துனுவில எனும் இடத்தில் மூன்று முஸ்லிம் சகோதரர்கள் சறக்கேற்றும் பங்கின் அடிப்படையிலேயே விகாரைக்குரிய நிலங்களை மானியமாகப் பெற்றுள்ளதுடன் இவர்களும் அதற்கான வரியாக பணமே செலுத்தியுள்ளனர்.

தலதா மாளிகைக்கு தேவையான மணலைப் பெற்றுக் கொடுத்தமையால் குருந்துகொள்ள கிராமத்தில் அப்துர் ரஹ்மான் மற்றும் குப்பகண்டு ஆகியோர் பதவிலி சேவைப் பங்குகளைப் பெற்றுள்ளனர்.

அத்துடன் ஹங்குரன்கெத்த மகா தேவாலயத்தின் முத்தெட்டு நிலங்களின் விளைச்சலை உலப்பனை தேவாலய அட்டுவாவுக்கு(களஞ்சியத்துக்கு) கொண்டு செல்லும் பணியை மேற்கொண்டமைக்காக இஸ்மாயில் லெப்பை என்பவருக்கு இத்தேவாலயத்துக்குரிய வயற்காணிகள் பரவேனியாக வழங்கப்பட்டுள்ளது.

நாட்டின் கரையோரப் பகுதிகளிலிருந்து வந்த முஸ்லிம் வர்த்தகர்களை வரவேற்று அவர்களின் சேவைகளை கௌரவிக்கும் விதமாக விகாரை நிலங்களிலேயே அவர்களுக்கு குடியிருப்புக்களை அமைத்துக்கொள்ள சந்தர்ப்பம் வழங்கியமைக்கு ரிதீ விகாரை, அஸ்கிரிய விகாரை என்பன மிகச் சிறப்பான உதாரணங்களாகும். இவ்வாறு குடியேறிய முஸ்லிம்களும் தமக்கு கிடைக்கப் பெற்ற சலுகைகளுக்கு நன்றி பாராட்டும் வகையில் மனமுவந்து விகாரைக்குரிய பணிகளை தொடந்தும் ஆற்றி வந்துள்ளனர். எனவே இம் முஸ்லிம்களுக்கு வழிபாட்டுத் தேவையை நிவர்த்தி செய்து கொடுக்கும் வகையில் விகாரகம நிலங்களிலேயே பள்ளிவாயல்களை அமைத்துக் கொள்ளவும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தெகல்தொருவ விகாரைக்குரிய பங்கொல்லாமட என்ற இடத்தில் முஸ்லிம் பள்ளிவாயலொன்னு அமைக்கப் பட்டுள்ளது. கண்டி மீராமக்கம் பள்ளியும் இதற்கான பிறிதொரு உதாரணமாகும்.

மேற்படி போக்குவரத்துச் சேவைகளை மட்டுமேயன்றி விகாரையொன்றுக்கு அவ்அப்போது செய்யப்பட்ட உற்சவங்களில் பங்கேற்றல், கட்டட நிர்மாண மற்றும் திருத்த வேலைகள் என்பவற்றிலும் கண்டிய முஸ்லிம்கள் பங்காற்றியுள்ளதுடன் இச்சேவைக்காகவும் விகாரகம நிலங்களை மானியமாகப் பெற்றுக் கொண்டுள்ளனர்.

குறிப்பாக பௌந்த விகாரைகளுக்கெல்லாம் தலைமைப் பீடமாக விளங்கும் புனிதமிகு ஸ்ரீ தலதா மாளிகையுடன் முஸ்லிம்கள் கொண்டிருந்த தொடர்புகள் இங்கு முதன்மையாக குறிப்பிடத்தக்கவையாகும். புத்திரின் புனித தந்தங்கள் வைக்கப்பட்டுள்ளமையாலும், வருடாந்த எசல பெரஹரா வைபவத்தினாலும் இவ்விகாரையானது பௌந்தர்களிடையே கலாச்சார முக்கியத்துவம் மிகுந்ததொரு இடமாக திகழ்கின்றது. இத்தகு முக்கியம் வாய்ந்த விகாரைக்கு மன்னர்களால் ஏராளமான நிலங்கள் தானமாக வழங்கப்பட்டதுடன் இவற்றில் சிலவற்றை மாளிகைச் சேவையுடன் பிணைக்கப்பட்டிருந்த முஸ்லிம்களும் பெற்றுக் கொண்டனர். மலையக முஸ்லிம்கள் மிகவும் நம்பிக்கைக்குரியவர்களாக செயற்பட்டு வந்தமையால் தலதா மாளிகையில் கன்னியமான அமைப்பில் நடாத்தப்பட்டனர். இதற்கு இவர்கள் செய்து வந்த சேவைகளே காரணமாகும்.

பட்டல் சேவை என்றழைக்கப்பட்ட உலோக வார்த்தல் கலையில் முஸ்லிம்கள் தேர்ச்சி பெற்று விளங்கியதுடன் விகாரைக்கு அவசியமான உலோகத்திலான பொருட்கள் இம்முஸ்லிம்களால் தயாரித்து

வழங்கப்பட்டுள்ளன. மலையகத்தின் பழைமையான முஸ்லிம் குடியிருப்பாகக் கருதப்படக் கூடிய ஹாரிஸ்பத்துவ வாசிகள் பட்டல் சேவையில் சிறப்புற்று விளங்கியுள்ளர். அஹமது லெப்பை, காதர் லெப்பை, உமர் லெப்பை ஆகிய மூவரும் தலதா மாளிகைக்கு உரித்தான தங்கம், வெள்ளியில் திருத்த வேலைகளை மேற்கொண்டுள்ளதுடன் புதிதாக தயாரிக்க வேண்டிய சந்தர்ப்பங்களிலும் விகாரையிலிருந்து தங்கம், வெள்ளி போன்ற உலோகங்கங்ளைப் பெற்று அவற்றிலிருந்து வனப்பு மிக்க முடிவுப் பொருட்களைத் தயாரித்து வழங்கியுள்ளனர். மேலும் காலத்துக் காலம் இப்பொருட்களைத் தீட்டி மெருகூட்டும் பணியும் இவர்களாலேயே ஆற்றப்பட்டுள்ளது. இவர்கள் வருடத்தில் இரண்டு தடவை தலதா மாளிகைக்கு வருகை தர வேண்டியிருந்ததுடன் முதலாவது முறை வரும் போது தியவடன நிலமைக்கும், காரிண கரணரால எனும் உத்தியோகத்தருக்கும் அதன் விதானைக்கும் வெள்ளியினால் செய்யப்பட்ட பொருளொன்றை வழங்குவதுடன் நாற்பது வெற்றிலைகளையும் கொடுத்தல் இவர்களின் கடமையாக இருந்துள்ளது.

இம்மூன்று முஸ்லிம்களும் ஸ்ரீ தலதா மாளிகைக்கு ஆற்றிய இக் கருமங்களுக்காக முன்வத்துகொடை எனும் கிராமத்தில் தலதா மாளிகையின் விகாரகம நிலங்களில் நான்கு வயல் நிலங்கள், இரண்டு வீட்டுத் தோட்டங்கள், மூன்று சேனைகள் என்பனவற்றின் பரவேணி உரிமை வழங்கப்பட்டுள்ளது.

அத்துடன் தங்கம், வெள்ளி உள்ளடங்களாக தலதா மாளிகையின் பெறுமதி மிக்க பொருட்களை வைத்துள்ள கஜானாவைப் பாதுகாக்கும் காரியகரண முரய எனும் காவலர் சேவையையும் முஸ்லிம்கள் பங்காற்றியுள்ளனர். இஸ்மாயில் லெப்பை, மதார் லெப்பை, உமரு லெப்பை, அஹமது லெப்பை, உதுமாலெப்பை, மீவலதெனிய இஸ்மாயில் லெப்பை போன்றோர் மேற்படி காவற்சேவை தேவைப்படும் வருடங்களில் அதற்காக நியமிக்கப்பட்டுள்ளனர். தியவடன நிலமை மற்றும் பிரதான பஸ்நாயக்க நிலமைகளால் இவர்கள் நியமிக்கப்பட்டுள்ளதுடன் இதற்காக முப்பது பவுன்களும் ஒரு கை வெற்றிலையும் தியவடன நிலமைக்கு வழங்கியுள்ளனர். அத்துடன் புதுவருடப் பிறப்பு வைபவத்தில் சம்பிரதாய அடிப்படையில் தியவடன நிலமைக்கு முன் இவர்கள் வருகை தர வேண்டியுமிருந்தது. காவல் சேவை வழங்கப்படாத வருடங்களிலும் பெரஹரா வைபவத்துக்கு இவர்கள் வருகை தருதல் கடமையாக இருந்துள்ளது. இச்சேவைக்காக முன்வத்துகொடை கிராமத்தில் பதிமூன்று எக்கர் விஸ்தீரனமான ஒரு வயல்வெளி இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. பொல்வத்தை, ஹாரிஸ்பத்துவ, மீவலதெனிய, கலுகமுவ என்ற பல கிராமங்களும் தலதா மாளிகையில் சேவையாற்றி முஸ்லிம்களுக்கு கிடைக்கப் பெற்ற மானிய கிராமங்களாகவே உள்ளமையை அடையாளம் காணக் கூடியதாக உள்ளது.

தலதா மாளிகைக்கு சொந்தமான முத்தெட்டு வயல் நிலங்கள் பல இருந்துள்ளதுடன் இவற்றில் விளையும் நெல்லை சேகரித்து ஒழுங்கான முறையில் மாளிகைக்கு கொண்டு வருவதற்காக ‘கம்மெஹலா’ ‘தூரயோ’ ‘மினும்’ என்ற பல்வேறுபட்ட பதவியிலான நபர்கள் இருந்து வந்துள்ளனர். இப்பதவிகளிலும் கூட முஸ்லிம்களும் பங்காற்றியுள்ளனர். இஸ்மாயில் லெப்பை, மதார் லெப்பை, உமரு லெப்பை என்போர் தூரயோ சேவைப் பங்கு காணிகளைப் பெற்றிருந்துள்ளனர். இவர்கள் விளைச்சலை கொண்டு வந்து சேர்க்கும் சேவையை மாத்திரமன்றி விளைச்சல் நடவடிக்கைகளில் தாமும் இணைந்து அவற்றைச் செய்துள்ளதுடன் விகாரையை அலங்கரித்தல், வருடத்தில் நான்கு நாட்கள் தியவடன நிலமைக்குரிய பணிகளைச் செய்தல் ஆகிய முக்கிய பணிகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

முஹம்மது மரிக்கார் என்ற அலதெனிய கிராமத்தை சேர்ந்தவரொருவர் நெல் அளத்தலுடன் தொடர்பு பட்ட மினும் பங்கு எனும் நிலமொன்றை விகாரையிடமிருந்து மானியமாக பெற்றுள்ளார். அத்துடன் விகாரைக்குரிய முத்தெட்டு வயல் நிலங்களிலிருந்து பெறப்பட்ட நெல்லை புதிர்ப் பொங்கல் என்ற வைபவத்தின் ஊடாக ‘மாளிகாவே மகா அட்டுவ’ என்றழைக்கபட்ட குருதெனிய கிராமத்தில் உள்ள களஞ்சியசாலைக்கு கொண்டு செல்லும் நிகழ்வு கண்டியின் பிரதான நான்கு வைபவங்களில் ஒன்றாக இருந்து வந்ததுடன் இதன் போது கொடிகளைத் தூக்கிச் செல்லும் பொறுப்பில் முஸ்லிம்கள் நியமிக்கப்பட்டிருந்துள்ளனர். இச்சேவைக்காக குருணாகல இல் மெட்டியன் பொத்த எனும் கிராமத்தில் விகாரகம நிலங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இது மட்டுமன்றி ‘கம்மெஹலா’ ‘தூரயோ’ என்போரின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்யும் பணி மற்றும் கத்பந்த எனும் வரி சேகரிக்கும் ‘கத்ராஜ காரிய’ பதவியையும் முஸ்லிம் வகித்துள்ளதுடன் இச்சேவைகளுக்கான மானிய நிலங்களையும் பெற்றுள்ளனர். இவர்கள் மாளிகையின் திருத்த வேலைகளைச் செய்துள்ளதுடன் சூடு மிதிக்கத் தேவையான மூன்று எருதுகளையும் வழங்கியுள்ளனர். இவ்வாறாக ஸ்ரீ தலதா மாளிகையின் பொருளாதாரத்தை வளப்படுத்தக் கூடிய பல்வேறுபட்ட பணிகளிலும் முஸ்லிம்கள் சிங்களவர்களுடன் இணைந்து பங்காற்றியுள்ளனர்.

இது தவிர தலதா மானிகையின் நிலங்கள் ஹேவிசி பங்குகளாகவும் மக்களிடத்தே வழங்கப்பட்டுள்ளது. பெரஹர வைபவத்தின் போது மேள வாத்தியங்களை வாசித்தோருக்கும், நடனக் காரர்களுக்குமே இச்சேவைப் பங்கு நிலங்கள் கிடைத்தன. இத்தகு பங்குகளையும் உமர்புள்ளே குப்பித் தம்பி, நெயினா ஒமரு புள்ளே ஆகியோர் பெற்றுக் கொண்டுள்ளனர். மில்லருப்பே விதான என்ற இடத்திலேயே இப்பங்குகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இவ்வாறு விகாரகம நிலங்களை மானியமாக பெற்ற முஸ்லிம்கள் பெரஹர நடைபெறும் நாட்களில் அதன் வேலைகளைக் கவனிப்பதற்காக தலதா மாளிகைக்கு வரவேண்டியிருந்தது. தலதா பெரஹரயுடன் நான்கு மஹா தேவாலயங்களின் பெரஹரயும் இணைந்தே நடைபெற்றுள்ளது.

இந்த வகையில் கண்டி பத்தினி தேவாலயத்தின் நிலங்களைப் பெற்றிருந்த முஸ்லிம்கள் பெரஹரா வைபத்தில் அலங்கரிக்கும் பணிகளில் ஈடுபட்டதுடன், தீவெட்டி பந்தம் தூக்குவதற்கான இருவரையும் அனுப்பி வைத்துள்ளனர். இச்சேவைக்காக மெட்டியன் பொத்த என்ற இடத்தில் இருந்த பத்தினி தேவாலயத்திற்குரிய சேவைப்பங்குகள் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன் பிரசித்தி பெற்ற அம்பக்கே தேவாலயத்தின் விகாரகம நிலங்ளிலும் மானிய உரிமை பெற்ற முஸ்லிம்கள் இருந்துள்ளனர். இந்த தேவாலயத்தைப் பொருத்தவரை மேற்குறிப்பிட்ட அவ்அப்போது செய்யப்பட்ட மற்றும் விகாரையின் நிர்வாக கட்டமைப்புடன் கூட முஸ்லிம்கள் தொடர்புபட்டுள்ளமையை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. மேற்படி சேவைகளுக்காக பதூவன் கொடை கிராமத்து வயற்காணிகள் முஸ்லிம்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மேலும் தொடந்தெனியே அஹமது லெப்பே என்பவருக்கு தொடந்தெனிய பிரதேசத்தில் இவ்விகாரைக்குரிய வயற் காணிகளில் கன்வசம் பங்குகள் வழங்கப்பட்டுள்ளன.

இவர் எம்மக்கே தேவாலயத்தில் பல முக்கிய பொறுப்புக்களை ஆற்றி வந்ததாகத் தெரிகின்றது. மிகவும் மதிப்புக்குரியவராக இருந்த இவர் வருடாவருடம் நடைபெறும் விகாரையின் நான்கு உற்சவங்களிலும் பங்கேற்றுள்ளார். பெரஹரா காலத்தில் பதினைந்து நாட்கள் விகாரைக்கு வருகை தந்த இவர் அங்கு முக்கியஸ்தராகவே நோக்கப்பட்டுள்ளார். இவருக்கு வழங்கப்பட்ட நெற்காணிகளுக்கான மேலும் பல இராஜகாரியங்களையும் இவர் நிவர்த்தி செய்துள்ளார். விகாரையின் கூரையை புணரமைப்பதற்கான ஓடு, ரீப்பை, ஓலை என்பவற்றை இவரே வழங்கியுள்ளார். விகாரையின் பஸ்நாயக்க நிலமையுடன் இணைந்து பல முக்கிய நிர்வாக கருமங்களையும் இவர் ஆற்றியதாகக் குறிப்பிடப்படுகின்றது. அத்துடன் எம்பக்க தேவாலயத்தின் தெல் தென பங்கு எனப்பட்ட பங்குகளின் கீழும் மானிய நிலங்களை முஸ்லிம்கள் பெற்றுள்ளனர். குறிப்பாக தேவாலயத்துக்கு தேவையான எண்ணெயின் ஒரு பகுதியை இம் முஸ்லிம்களே பெற்றுக் கொடுத்துள்ளனர். தொடந்தெனிய உதுமான் லெப்பை என்பவர் எம்பக்கே தேவாலயத்தில் இரவு காவல் சேவையிலும் ஈடுபட்டுள்ளார். இதற்கென தேவாலயத்துக்கு அருகிலேயே இவருக்கு மானிய நிலமொன்று வழங்கப்பட்டுள்ளது. இது ‘அத்தபத்து பங்கு’ என்ற காவல் புரியும் காணிப்பங்குகளாகவே வழங்கப்பட்டுள்ளது.

அஸ்கிரிய அலுத் விகாரையுடன் முஸ்லிம்கள் தொடர்புகளைக் கொண்டிடுருந்ததுடன் அதனாலேயே அவர்களுக்கு நிலங்கள் மானியமாக கிடைக்கப் பெற்றமையை அறியக் கூடியதாக உள்ளது. குறிப்பாக ஆண்கள் மட்டுமேயன்றி பெண்களும் கூட இவ்விகாரைக்குரிய மானிய நிலங்களைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்க சிறப்பம்சமாகும்.

அஸ்கிரிய விகாரைக்குரிய தொடன் கொல்ல எனும் நிலத்தை ரகுமத் நாச்சியா எனும் முஸ்லிம் பெண் பெற்றுள்ளதுடன் இதற்கான இராஜகாரியத்துக்கு பதிலாக கறுவாட்டுக் கூறியும் வெற்றிலை நாற்பதும் தலைக்கு ஒரு சிலினுமாகச் செலுத்தியுள்ளார். அக்குறணையைச் சேர்ந்த கதீஜா நாச்சியா என்ற முஸ்லிம் பெண்ணும் இவ்விகாரைக்குரிய நிலங்களைப் பெற்றுள்ளார்.

தற்போதைய கேகாலை மாவட்டத்தில் மெதகொடையைச் சேர்ந்த தொரவக நாத தேவாலயத்தின் ஏராளமான காணிப்பங்குகளை முஸ்லிம்கள் பரவேணியாக பெற்றிருந்துள்ளனர். படைச்சேவையில் ஈடுபட்டமையால் ஆரம்பத்தில் கேடயத்தை தூக்கும் பங்குகள் இவர்களுக்கு கிடைக்கப் பெற்றுள்ளதாக கூறப்படுகின்றது.

கண்டி மகா தேவாலயத்தின் மானிய உரித்துடைய அதனுடன் தொடர்புபட்ட ஒரு பகுதியாகவே அளுத்நுவர காணப்பட்டுள்ளது. கண்டி மகாதேவாலயத்துக்கு சொந்தமான பல கிராமங்கள் கேகாலைப் பிரதேசத்தில் காணப்பட்டுள்ளன. வைத்தியரத்ன முதலியார் அகமது லெப்பை ஹபீபு லெப்பை என்பவரும், கலாரட கெதர காதர் லெப்பை குப்பித்தம்பி மிஸ்கின் பாவா என்பவரும் கண்டி மகா தேவாலயத்தில் சில முக்கிய கருமங்களுக்கு பொறுப்பாக இருந்துள்ளனர். குறிப்பாக விகாரைக்கு அவ்அப்போது ஆற்றப்படும் பல்வேறுபட்ட சேவைகள் இவர்களால் ஆற்றப்பட்டுள்ளன. உற்சவ காலத்தில் விகாரையில் தோரணம் கட்டும் பணி இவர்களுக்குரியதாகவே காணப்பட்டுள்ளது. மேலும் இவ் விகாரையிலும் அளுத்நுவர விகாரையிலும் நிர்மாண பணிகள், விகாரையை பழுது பார்க்கத் தேவையான மரங்களை வழங்குதல், தேவாலயத்தில் சாதாரன திருத்த வேலைகளைச் செய்தல் என்பன இவ் இருவரினதும் பொறுப்பாகவே இருந்துள்ளது.

இத்தேவாலயங்களில் சிங்கள வருடத்தின் அடிப்படையில் பழைய சம்பிரதாயப்படியும் வருடமொன்றுக்கு நான்கு உற்சவங்கள் நடைபெறுவது வழக்கமாக இருந்துள்ளது. புதுவருடப்பிறப்பு, எசலமஹா பெரஹரா வைபவம், கார்த்திகை வைபவம், அத்துடன் அறுவடை முடிந்து விளைச்சலைக் கொண்டு செல்லும் ‘அலுத் சஹல் மங்கல்ய’ என்பனவே அவையாகும். இக் கருமங்களைச் செய்தமையால் இவர்களுக்கு இத் தேவாலயங்களுக்குச் சொந்தமான மலையகத்தின் நான்கு கோறளை பகுதியில் கல்பட கோறளையில்

கெக்கிரிகொட என்னும் ஊரில் உள்ள 17 ஏக்கர் விஸ்தீரனமுள்ள கொஹொவிலே வத்த எனும் தோட்டம் பரவேணியாக வழங்கப்பட்டுள்ளது. இந்த வகையில் இந் நான்கு வைபவங்களிலும் மேற்படி முஸ்லிம்கள் இருவரும் பங்கேற்றல் அவர்களது பொறுப்பாக இருந்துள்ளது. இதன் போது இரண்டு கைக்குட்டைகளை பரிசளிப்பதுடன் அரிசி, வாழைக்குழை, தேங்காய் போன்றவற்றையும் மகா தேவாலயத்திற்கு செலுத்த வேண்டியிருந்தது.

இவ்வாறாக மலையக இராட்சியத்தின் முக்கியமான பௌத்த தேவாலயங்களினதும் விகாரைகளினதும் சேவைப்பங்குக் காணிகளை முஸ்லிம்கள் பெற்றுள்ளனர். அதாவது விகாரைகளுக்கு பல்வேறுபட்ட சேவைகளைச் செய்ததன் ஊடாக முஸ்லிம்கள் விகாரகம எனும் எண்ணக்கருவின் கீழ் மலையக இராட்சியத்தின் பல பகுதிகளிலும் நிலங்களை மானியமாகப் பெற்று அவ்விடங்களிலேயே பரம்பரை பரம்பரையாக வாழவும் தலைப்பட்டுள்ளனர்.

ரொபட் நொக்ஸ் குறிப்பிடும் போது

> அவர்கள் அவர்களின் தேசத்திலேயே உள்ள ஏழைகளுக்கு வழங்குவோராக உள்ளனரா? ‘‘நான் மற்றவருக்கு தெறிவிப்பது யாதெனின் மூர்களான பிச்சைக் காரர்கள் இவர்கள் சமயத்தில் முஹம்மதியர்கள், இவர்களுக்கென கண்டியில் பள்ளிவாசல்கள் உள்ளன. இவர்கள் செய்த சேவை எனக்கூறி கண்டிய மன்னர்கள் நிலங்களை வழங்கியுள்ளனர். பிச்சை பெற்ற நிலத்துக்காக எனக் கூறி இவர்கள் விகாரைகளுக்கும் மன்னனுக்கும் வெக்கமற்று சேவையாற்றி வருகின்றனர். இத்தகைய மூர்கள் அதிகளவிலான நிலத்துக்கு சொந்தக் காரர்களாக உள்ளதுடன் அங்கேயே அவர்கள் வீடமைத்து வாழ்ந்து வருகின்றனர். இந்நிலங்கள் பரம்பரை பரம்பரையாக அவர்களுக்கு உரித்துடையனவாகவே மாறிவிட்டன.’’

மேற்படி நொக்ஸ் இன் கருத்திலிருந்து முஸ்லிம்கள் மலையகத்தின் பெருமளவிலான நிலங்களை பரவேணி அடிப்படையில் பெற்று வாழ்ந்து வந்தார்கள் என்பதையும் அவ்விடங்களிலேயே அவர்கள் தொடர்ந்தும் வாழ்வதற்கு எத்தகைய தடையும் காணப்படவில்லை என்பதை உறுதிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

விகாரகம/தேவாலகம எண்ணக்கருவின் கீழ் மலையகத்தின் மையப்பகுதியில் மாத்திரமேயன்றி நான்கு கோறளை, ஏழு கோறளைப் பகுதிகளிலும் முஸ்லிம்களின் குடியேற்ற விஸ்தரிப்பு ஏற்பட்டது. குறிப்பாக முஸ்லிம்கள் விகாரைகளுக்கு செய்த சேவைகளுக்காக விகாரைகளுக்குரிய இந்நிலங்கள் மானியமாக வழங்கப்பட்டதுடன் தொடர்ந்தும் அவற்றை அனுபவிப்பதற்காக அவ்விகாரைக்கு இராஜகாரிய சேவைகளை இம் முஸ்லிம்கள் செய்து வந்துள்ளனர். இது சிங்கள – முஸ்லிம் உறவின் மிகவும் சீரிய நிலையைக் காட்டுவதாக உள்ளது. சிலபோது சிலவித சேவைகளை முஸ்லிம்களால் செய்ய முடியாத பட்சத்தில் அச்சேவைகளுக்கு பதிலாக பணமோ வரியோ செலுத்தவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. இது பௌத்த நிறுவனங்களிடையே நிலவிய மிக உயரிய நெகிழும் இயல்பைக் காட்டக் கூடியதாக உள்ளது. அத்துடன் விகாரை சேவையில் பிணைக்கப்பட்டிருந்த முஸ்லிம்களுக்கு அவர்களின் சமயத்தை பின்பற்றுவதிலும் எத்தகைய இடையூரும் இருக்கவில்லை. விகாரகம நிலங்களிலேயே பள்ளிவாயல்கள் அமைத்து தம் சமய சடங்குகளை இவர்கள் ஆற்றி வந்துள்ளனர். சில போது இப்பள்ளிவாயலை கொண்டு நடாத்த தேவையான நிதி விகாரைக்குக் கிடைக்கப் பெற்ற நிதியிலிருந்தே வழங்கப்பட்டும் உள்ளது. இவ்வாறாக விகாரகம தேவாலகம எண்ணக்கருவின் கீழ் சிங்கள சமூகத்துடனான நல்லுறவால் மலையகத்தில் முஸ்லிம்களின் குடியேற்ற விஸ்தரிப்பு ஏற்பட்டுள்ளமையை அடையாளம் காணக் கூடியதாக உள்ளது.

**5. பரிந்துரைகள்**

விகாரகம எண்ணக்கருவின் கீழ் மலையகத்தில் முஸ்லிங்களின் குடியேற்ற விஸ்தரிப்பை ஆராய்வுக்கு உட்படுத்தும் போது சிங்கள-முஸ்லிம் நல்லுறவே அதன் இருப்பை தீர்மானித்துள்ளது என்பது தெளிவாகின்றது. இத்தகைய உறவு தீர்ப்பதில் புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு, பரஸ்பர தொடர்புகள் என்பனவையே பிரதானமாக அமைந்துள்ளன.

வரலாற்றின் பக்கங்களில் மிளிரக் கூடிய இத்தகைய நல்லிணக்கத்தின் அடிப்படைகளை பன்மை சமூகத்தில் விதைத்தால் மட்டுமே அமைதியும் மகிழ்ச்சியும் மிக்க சமுதாய வாழ்வை அனுபவிக்க கூடியதாக இருக்கும். எனவே மேற்படி அமைப்பிலான வரலாற்றை மீட்டி சிங்கள-முஸ்லிம் சமூகங்களிடையே நல்லிணக்கத்தை தாபிப்பது சமகால தேவையாக உள்ளது.

சமகாலத்தில் மேலெழுகின்ற பிரச்சினைகளுக்கு பிற சமயம் பற்றிய தெளிவின்மையும், சந்தேக மனப்பாங்குமே பிரதான காரணியாக உள்ளது. எனவே பல் சமயக் கலந்துரையாடல்கள், பல் சமய விழாக்கள் போன்றவற்றை ஏற்பாடு செய்து பிற சமுதாயம் பற்றி திறந்த மனப்பான்மையுடன் நோக்கிப் பார்க்கும் சமுதாயத்தை கட்டியெழுப்புதல் அவசியமாகும்.

இலங்கை மக்களின் வாழ்வியலோடு பிண்ணிப் பிணைந்த அம்சமாக சமயம் உள்ளதோடு வரலாற்றைப் போற்றும் பண்பும் மிக உயரிய மட்டத்தில் காணப்படுகின்றது.

எனவே வெறுமனே நல்லிணக்கத்தை கோட்பாடு ரீதியாக சமுதாயத்தில் உள்வாங்கச் செய்வதனை விட வரலாற்றை அறியச் செய்வதனூடாக உட்புகுத்தல் அதிக பிரயோக ரீதியானதாக காணப்படும். எனவே மேற்படி வரலாற்றை வெளிப்படுத்துவதன் ஊடாக குடும்பம், பாடசாலை போன்ற ஆரம்ப சமூக நிறுவனங்களினூடாக புதிய தலைமுறையினருக்கு அடுத்த சமூகம் பற்றிய கரிசனையையும், பன்மைத்துவ சமூக அமைப்பை ஏற்று வளரும் மனப்பான்மையையும் ஏற்படுத்தல் வேண்டும்.

விகாரகம எண்ணக்கருவின் ஊடாக சகிப்புத்தன்மையையும் விட்டுக்கொடுப்பையும் மேற்கொள்வதன் அவசியத்தை யதார்த்த பூர்வமாக வெளிப்படுத்துவதுடன் இத்தகைய சிங்கள முஸ்லிம் நல்லுறவின் தன்மையையும் அதன் பயன்களையும் தற்போதைய சூழலுக்கு ஏற்ப பிரயோகிக்க வேண்டி உள்ளது. அதாவது மீண்டும் முஸ்லிங்கள் விகாரைக்குரிய இராஜகாரியங்களை செய்ய வேண்டும் என்பதல்ல. மாறாக கலாச்சார விட்டுக்கொடுப்புகளை மேற்கொண்டு வரலாற்றினூடே சகவாழ்வை கட்டியெழுப்ப முயற்சிக்க வேண்டும்

இவ்வாறாக மலையகத்தின் வரலாறு போன்றே நாடு பூராகவும் உள்ள சிங்கள-முஸ்லிம் நல்லுறவின் வரலாறுகளை வெளிப்படுத்த ஒவ்வொருவரும் முன்வருதல் வேண்டும்.

மேற்படி வரலாறுகள் ஒவ்வொரு கிராமத்தையும் மையப்படுத்தி விரிவாக மேற்கொள்ளப்பட வேண்டி உள்ளதுடன் இதனுள் பொதிந்துள்ள உயரிய பாடங்களை எதிர்கால நாட்டின் தலைவிதியை நிர்ணயிக்கவுள்ள மாணவ சமுதாயத்திடம் புகுத்துவதும் அவசியமாகும்.

### 6. முடிவுரை

இவ் ஆய்வின் ஊடாக விகாரகம எண்ணக்கருவின் கீழ் முஸ்லிம்கள் விகாரைக்கு செய்த சேவைகள் மற்றும் அவர்களுக்கு வழங்கப்பட்ட நிலமானியங்கள், அவற்றின் தன்மை என்பன வெளிப்படுத்தப்பட்டுள்ளன. மலையகத்தில் மேற்படி எண்ணக்கருவின் கீழ் எவ்வாறு முஸ்லிம்களின் குடியேற்ற விஸ்தரிப்பு ஏற்பட்டது என்பதை மையமாகக் கொண்டே இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி வரலாற்றை வெளிப்படுத்துவதால் மலையகத்தில் முஸ்லிம்களின் குடியேற்ற விஸ்தரிப்பு சிங்கள- முஸ்லிம் நல்லுறவு என்ற அடித்தளத்தில் கண்டிய நிறுவனங்களின் வரவேற்கும் மாண்பு, முஸ்லிம்களின் புரிந்துணர்வு, விட்டுக்கொடுக்கும் பண்பு, பௌத்தர்களின் சகிப்புத்தன்மை போன்ற உயரிய கோட்பாடுகளின் விளைவினதாக ஏற்பட்டதொன்றே என்பதை தெளிவாக அடையாளப்படுத்தக் கூடியதாக உள்ளது. சிங்கள-முஸ்லிம் நல்லுறவில் விரிசல்கள் ஏற்பட்டுவரும் தற்காலத்தில் இத்தகைய வரலாறு வெளிச்சத்துக்கு கொண்டுவரப்படுதல் காலத்தின் தேவையாக உள்ளது.

### 7. ஒப்புகை(Acknowledgement)

இவ்வாய்வானது “விகாரகம தேவாலகம எண்ணக்கருவின் கீழ் மலையகத்தில் முஸ்லிம்களின் குடியேற்ற விஸ்தரிப்பு'' என்ற தலைப்பில் மேற்கொள்ளப் பட்டுள்ளது. இந்த ஆய்வினை சிறப்பாக செய்து முடிப்பதற்கு பலரும் ஒத்துழைப்பு நல்கினர். தமது பெறுமதியான நேரங்களை எமக்கு அளித்து இவ்வாய்வினை செம்மைப் படுத்திய விரிவுரையாளர்களுக்கு எமது மனமார்ந்த நன்றிகள். 8வது சர்வதேச கருத்தரங்கினை (SEUIARS 2019) இவ்வாய்வினை ஒழுங்கு செய்த ஏற்பாட்டுக் குழுவினர்கும் நாம் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளோம். மேலும் இவ்வாய்வினை சிறந்த முறையில் செய்வதற்க்கு பல வகையிலும் உறுதுணையாக இருந்த பெற்றோருக்கும் மற்றும் ஒத்துழைப்பு வழங்கிய நண்பர்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

### 8. References

**முதல்நிலை மூலாதாரங்கள்**

30B, S.L.N.A, *Service Tenures Register*. (Sin.1872).Kegalle. 229.

S.L.N.A, *Service Tenures Register*. (Sin.1872).Kegalle. 353.

S.L.N.A, *Service Tenures Register*. (Sin.1872).Kandy. 540,629,631.

S.L.N.A, *Service Tenures Register*. (Sin.1872).Kurunagala. 926,947.

Bell, H.C.P, *Report on the Kegalla District of the Province of Sabaragamuwa.* Ceylon Sessional Papers. xix of 1892. Colombo.

**இரண்டாம் நிலை மூலாதாரங்கள்**

சுக்ரி, எம்.ஏ.எம். (2010). *இலங்கை முஸ்லிம்களின் தொண்மைக்கான வரலாற்றுப் பாதை.* ஏ.ஜே. பிரிண்டர்ஸ்.

தாரிக், எம்.எஸ்.எம். (2009). *மலையக வாசல் மலர்வனம்.* எம்.ஜே.எம் ஒப்செட் பிரின்டர்ஸ். மாவனல்லை.

தாரிக், எம்.எஸ்.எம். (2009). *உறைந்த பனி : இலங்கை முஸ்லிம்கள் பற்றிய ஒரு வரலாற்று ஆய்வு.* எம்.ஜே.எம் ஒப்செட் பிரின்டர்ஸ். மாவனல்லை.

புவாஜி, ஏ.ஏ.எம். (1999). *மாத்தளை மாவட்ட முஸ்லிம்கள்,* திரீயெம் பிரின்டர்ஸ். மெட்ராஸ்.

நஜிமுதீன், ஏ,எம். (1998). *கண்டி இராட்சிய முஸ்லிம்களின் சிங்கள வம்சாவளிப் பெயர்கள்.* நுவன் ஒப்செட். மாத்தளை.

ாபதசஇ ஆï. Ù. ஆï. ஆயை. (2005). *கழயதனஇ றுஅ்.* ச்யமனாட அமுளமயகப¾யை. மளÜபï்ருஙத.

ப்னமனÉÑஇ வ. கசன. (2016). *கஅ!சனமுளட யை:னம லை யைரனசட டநு.இயஇ ழளயைமுளடயடா.* மநமளஇ அ்இளகடயஜமய அமுாளகதÜ இளாñபÙ.

ப்ரஇச்யமஇ கடய .ä .. (1991). *ìமு்னமா்மய ாபக்ய இஓடனகப்  ப்லனச டிள் அனஇமா.* யைத¾முகஇயடன ரஙøமுனஇா. கழலளதஇ.

ப்கஉயளைஒலஇ ளை .றன¾. (1998). *றுளசப அதஙா கலயம லை றன¾Óடா.* ä. ளை கழனளஒக.னள ரஙøமுனஇா.

ஙைமளஇன வுப்பக.ழசஇ (2001) *ற்யமஙதச கழயதனஇா லை த்யஅளாளகத்ய ப்ர¾லுமா.* ˙சமய அளமுமயப¾யை.

Condrington, H.W. (1938). *Ancient Land Tenure and Revenue in Ceylon*. Ceylon Government Press. Colombo.

Dewaraja, Lorna. (1994). *The Muslims of Sri Lanka One Thousand Years of Ethnic Harmony: 900-1915,* London Islamic Foundation. Colombo.

Dewaraja, Lorna**.** (1972). *The kandyan kingdom of Ceylon: 1707-1760,* Lake House Investments ltd. Colombo-2.

Mohan Vasundara**.** (1985). *Muslims of Sri Lanka,* Aalekh Publishers. Jaipur.

Shukri, M.A.M**.** (1986). *Muslims of Sri Lanka Avenue to Antiquity*. Jamiah Naleemia Inst. Beruwala.